| |
|---|
| **குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி** |
| **முன்னிலை - திரு. R.பூமிநாதன், B.Sc.,B.L.,** |
| **நீதித்துறை நடுவர், நான்குநேரி** |
| **2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை** |
| **ஆண்டுபட்டிகை வழக்கு எண். 183/2022** |
| **CNR No. TNTL 20-003887-2022** |

| | |
|---|---|
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>ஏர்வாடி காவல்நிலையம்,<br>குற்ற எண். 259/2021. | **.... குற்றமுறையிட்டாளர்** |
| **/எதிர்/** | |
| ஹாஜா நஜிமுத்தீன், வயது 44/2021,<br>த/பெ. முகம்மது ஹனிபா,<br>8/14, மேற்குத்தெரு,<br>முகைதீன் நகர்,<br>ஏர்வாடி. | **.... குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

இவ்வழக்கானது கடந்த 16/07/2022-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 17/08/2026-ம் தேதி இன்று வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 திரு.மைக்கேல் ஜெரால்டு அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.M.மணியன்சேதுபதி, அவர்களும் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள்

பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஏர்வாடி காவல் நிலையம் குற்றஎண். 259/2021 | |
|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | ஹாஜா நஜிமுத்தீன் |
| | | தந்தை பெயர் | முகம்மது ஹனிபா |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | ஏர்வாடி |
| | | வயது | 44/2021 |
| 2 | சம்பவ தேதி | | 27/09/2021 |
| 3 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 16/07/2022 |
| 4 | கைது | | 28/09/2021 |
| 5 | பிணையில் விடுவித்ததல் | | 28/09/2021 |
| 6 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | | 05/08/2026 |
| 7 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 06/08/2026 & 06/08/2026 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 06/08/2026 & 06/08/2026 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 12/08/2026 & 12/08/2026 |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | | 17/08/2026 |
| 9 | விசாரணை முடிவு | | 17/08/2026 |
| 10 | தண்டனை அல்லது உத்தரவு | | 18/08/2026 |

| | | |
|---|---|---|
| 11 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு /முடிவு | 18/08/2026 |
| 12 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**:

இவ்வழக்கில் சாட்சி 1ன் வீட்டின் எதிரில் குடியிருந்து வரும் எதிரி எப்போதும் சாட்சி 1டம் வம்பு பேசி வந்ததால், சாட்சி 1 எதிரியிடம் பேசுவதை நிறுத்தியதாகவும், இதனை மனதில் வைத்துக்கொண்டு எதிரி, சாட்சி 1ன் மீது முன்பகையில் இருந்து வந்ததாகவும், இதன் காரணமாக 27.09.2021ம் தேதி பகல் 12.30 மணியளவில் ஏர்வாடி முகைதீன் நகர், பைத்துஸ்லாம் பள்ளி தெருவில் குடியிருந்து வரும் சாட்சி 1 ரெஜினா வீட்டு முன்பு தெருவில் நின்ற பஞ்சாயத்து பூவரசு மரமானது வெட்டப்பட்டிருந்ததால், சாட்சி 1 தெருவில் நின்று இந்த மரத்தினை யார் வெட்டியது என பொதுவாக கேட்கவும், அப்போது அங்கு நின்ற எதிரி குற்றம் செய்யும் நோக்கத்துடன் சாட்சி 1 ஐ ஒரு பெண் என்றும் பாராமல், சாட்சி 1ஐ பார்த்து தேவுடியா செருக்கி இப்பம் உனக்கெல்லாமல் இது தேவையா, புண்டா மவளே என பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி சாட்சி 1ஐ தாக்க சென்று அவமானப்படுத்தியும், எதிரியின் இச்செயலால் சாட்சி 1 ன் பெண்மைக்கு பெருத்த அவமானத்தையும், மன உளச்சலையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக ஏர்வாடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b) & பிரிவு 4 of TNPHW Act -ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **எதிரிக்கு கு.வி.மு. ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல்** :

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு

கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

3) **குற்றச்சாட்டு வனைதல் :**

எதிரிக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b) & பிரிவு 4 of TNPHW Act -ன் படியும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4) **அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

அ.சா.3 பேரின்பராஜ் தனது சாட்சியத்தில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 28.09.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு தலைமை காவலர் முத்துகுமார் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது ஏர்வாடியை சேர்ந்த காஜா முகைதீன் மனைவி ரெஜினா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண்.259/2021 இ.த.ச. பிரிவு 294(b) and Sec.4 of TNPHW Act ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் முத்து பாண்டியன் அவர்கள் பார்வைக்கு வைத்தார் என்றும், அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 28.09.2021 ஆம் தேதி பகல் 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் பீர் முகமது, மொஹர் பானு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும்,

சாட்சிகள் ரெஜினா, செய்துன் நிலோபர், ஹமீது அலி, அபு பக்கர், முகமது இட்ரின் சஃபி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் பீர் முகமது, மொஹர் பானு ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவு 294(b) and Sec.4 of TNPHW Act-ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

5)**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :

இவ்வழக்கில் அ.சா.1ம் எதிரியும் சமாதானமாக செல்வதாக மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கில் அ.சா.1 புகார்தாரர் மற்றும் அ.சா.2 கண்ணுற்ற சாட்சி ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், ஏனைய சாட்சிகளை விசாரிப்பதில் நீதிமன்ற நேரம் விரையமும், மேலும் ஏனைய சாட்சிகள் விசாரிப்பதினால் வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படபோவதில்லை என்பதால் அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 10 சாட்சிகளில் 7 சாட்சிகளை அரசு தரப்பு விலக்கிக் கொண்டு விசாரணை அதிகாரி அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **<u>கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்</u>**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

7) **<u>அரசு தரப்பு வாதம்</u>**:

அரசு தரப்பில் அ.சா. 1,2,3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், அ.சா.3 புலன் விசாரணை சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 ஆவணங்களின் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் படி வாதிடப்பட்டது.

8) **<u>எதிரி தரப்பு வாதம்</u>**:

எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1,2 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், ஆகையால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

9) **<u>குற்றச்சாட்டு மீதான விவாதம்</u>** :

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

10) **<u>தீர்வு</u>**:

(i) அ.சா.1,2 ன் சாட்சியத்தை ஆராய்கையில் எதிரி அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசியதாகவோ, எதிரி அ.சா.1ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவோ சாட்சியங்கள் அளிக்கப்படவில்லை. அதாவது அ.சா.1ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசிலினை செய்ததில்,

> *"ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுகாரர். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெப்பம் என்னுடையது தான் அந்த கையெப்பம் அ.சா.ஆ.1 ஆகும். வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை.*

| |
|---|
| *எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை"* என்று சாட்சியம் அளித்துள்ளார். |

எனவே அ.சா.1 முதல் விசாரணையில் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும்

| |
|---|
| அ.சா.2 ன் சாட்சியத்தில் "*அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுகாரர். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை*" என்று சாட்சியம் அளித்துள்ளார். |

(ii) எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1,2 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் பொருண்மை எதுவும் அமையவில்லை. அ.சா.3 விசாரணை அதிகாரி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரிக்கு எதிரான குற்றசாட்டுக்களை பொறுத்து தனிநபர் சாட்சியம் எதுவும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.3 விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11) **இறுதியாக,** அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b) & பிரிவு 4 of TNPHW Act-ன் படியும் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி எதிரியை

விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12) **வழக்கு சொத்து மீதான உத்தரவு** :

இவ்வழக்கின் சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு சொத்து குறித்து எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.08.18 17:49:05 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. ரெஜினா (புகார்தாரர்) |
| அ.சா.2 | திருமதி. சேதுன்நிலோபர் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. பேரின்பராஜ் (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 28/09/2021 ம் தேதியிட்ட புகார் மனுவில் அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 28/09/2021 ம் தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 28/09/2021 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 28/09/2021 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 28/09/2021 ம் தேதியில் பதிவு செய்த மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>** - இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்</u>**-இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.08.18 17:49:12 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**<u>குறிப்பு</u>**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 4. | எதிரியால் பிறப்பிக்கப்பட்ட பிணைபத்திரம் இன்றிலிருந்து 1 மாத காலத்திற்கு பின்பு தானாகவே இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |
| 5. | எதிரியால் கு.வி.மு.ச. பிரிவு 437(A) Cr.P.C. -ன் கீழ் பிறப்பித்த பிணைபத்திரம் 6 மாத காலத்திற்கு பின்பு தானாக இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |